முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பிடிநாகீசர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

06.10.2018, சனிக்கிழமை

1. **அறம் வளர்க்கும் ஞான தேசிகா**
**அருள்பட வரம் தந்து காக்கும்**
**அரங்கமகா ஞானியே தேசிகா**
**அகிலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி தரிவை திங்கள்**
**தெரியவே இருபான் திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 20ம் நாள் 06.10.2018, சனிக்கிழமை)**
**தேசிகனுக்கு பிடிநாகீசர் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அன்னதான நெறியை
ஞான வழி வரும் மக்களெல்லாம்
நம்பிக்கைபட ஏற்று நடக்க
4. நடக்கவே தரும பலம் பெருகிட
நல்லோர்கள் சேவைகளில் இறங்கி
இடரில்லாத ஆளுமை பலம்
எல்லா திக்கிலும் ஞானசக்தியாக பரவி
5. பரவியே கலியுகம் தன்னில்
பாடிடுவேன் ஆறுமுகன் ஞான
துறவிகள் ஆட்சி மலரும்
தூய ஞான செயலாக்கம் கூடி
6. கூடியே மக்கள் நோக்கமறியும்
குறையிலா உயர் சேவை புரியும்
நெடிய ஆயுள் கீர்த்தி கொண்ட
நீதிமான்கள் எல்லா துறைகளிலும்
7. துறைகளிலும் பதவிக்கு வந்து
துறைவாரியான வளர்ச்சிகளும்
முறையான மதிப்பீடுகளும் கூட
முழுமைபட பாதுகாப்புடன் நடக்கும்
8. நடக்கும் தரும ஆட்சியாக
ஞானிகளை கொண்டு மாற்றம்
தடையற வருமுலகில் நடக்கும்
தருமவான் அரங்கன் தலைமை

9. தலைமை ஏற்று ஞானம் வழி
தன்னலம் கருதா வருபவர்கள்
தலைமை பதவிகளுக்கு வந்து
தரணியிலே உயர் சேவை புரிய நேரும்

10. நேருமையான வாழ்வு வளமும்
நிலவுலகே தரும பலத்தை பெருக்கவே
ஆறுமுகன் இறங்கி தருவார்
அன்னதனால் கலிவாழ் மக்களே

11. மக்களே அரங்கனை நோக்கி வாரீர்
மாற்றம் அடைவர் சிறப்பர்
தேக்கமிலா ஞான தேற்றமடைவர்
தெரிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் பிடிநாகீசர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா தானதருமங்களை உலக நலன் கருதி செய்த உலகின் தருமபலத்தை உயர்த்திட வேண்டியே அறம் வளர்க்கின்ற ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உம்மை நாடி வருகின்றோர்க்கு அருளுடன் வரமும் அளித்து அவர்களை காக்கின்ற ஆறுமுக அரங்கமகா ஞானியே அற்புதமான உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 20ம் நாள் 06.10.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பிடிநாகீசர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பிடிநாகீசர்.

எல்லா நலங்களையும் வளங்களையும் தந்து மனிதனை தெய்வமாக்கும் வல்லமைமிக்கதும் ஞானமளிக்கும் ஞானவீட்டின் திறவுகோலான ஜீவதயவினை வளர்க்கின்றதும் ஞானமளிக்கவல்லதுமான வல்லமைமிக்க தர்மசெயலாம் அன்னதான நெறியினை ஞானம் வேண்டி ஞானவழி வரும் மக்களெல்லாம் நம்பிக்கையோடு ஏற்று அன்னதானம் செய்து வர வேண்டும்.

உலக மக்கள் நம்பிக்கையோடு அன்னதானம் செய்து வரவர, உலகினில் தருமபலம் பெருகிடும். உலகின் தர்மபலம் பெருகபெருக, நல்லோர்களும் சேவைகளில் இறங்கி செயல்படுவார்கள். ஆதலினால் உலகினில் இடர்கள் ஏதும் இல்லாத ஆட்சியானது பலமுடன் எல்லாதிக்கிலும் பரவி அது ஞானசக்தி வடிவினில் பரவிடும்.

கலியுகம் முழுதும் பரவிடும் ஞான சக்தியானது இந்த மாமாயை சூழ் கலியுகத்தினில் மாயையின் பிடியிலிருந்து உலகைக் காக்க முருகப்பெருமான் தலைமையில் பற்றற்ற துறவிகளினால் ஞான ஆட்சியாக மலர்ந்திடுமப்பா.

தூய்மையான ஞானத்தினால் கூடிய செயல்பாடுகள் எல்லாம் ஞானசக்தி பெருகி செயல்படுத்தப்படும். மக்களது நோக்கம் அறிந்து குறை ஏதும் இல்லாமல் மக்கள் மனநிறைவு அடையும்படியாக உயர்சேவைகளை அந்த துறவிகள் கூட்டம் செய்திடும் ஞானபண்டிதன் முருகப்பெருமான் தலைமையில்.

அந்தவித ஞானஆட்சியிலே நீடிய ஆயுளை பெற்றிட்ட புகழ்பெற்ற நீதிநெறி வழுவாது வாழும் நீதிமான்கள் தன்னலம் கருதாமல் பொதுநல நோக்கோடு அரசின் எல்லா துறைகளிலும் தாமே

முன்வந்து பதவியேற்று ஆறுமுகப்பெருமான் தலைமையில் துறைவாரியாக சகலவிதமான வளர்ச்சிகளை உண்டாக்குவார்கள், முறையான மதிப்பீடுகளை செய்வார்கள் எல்லா துறைகளும் முழுமையான பாதுகாப்புடன் நடந்திடும்.

நாட்டினில் நீதிமான்களால், துறவிகளால், முருகப்பெருமான் தலைமையில் நடக்கும் ஆட்சியானது நீதிநெறி வழுவாத தருமஆட்சியாக ஞானிகளைக் கொண்டு மாற்றம் செய்யப்பட்ட ஞானஆட்சியாக வருங்காலங்களில் உலகமெங்கும் நடந்திடும்.

எல்லையில்லா தருமங்களை செய்து உலகை காக்கின்ற தருமவான் ஆறுமுக அரங்கன் தலைமையை ஏற்றுக் கொண்டு ஞானத்தின் வழிதனிலே அரங்கனை பின் தொடர்ந்து வருகின்றவர் தன்னலம் கருதாத சிலர்களான அவர்களெல்லாம் நாட்டின் தலைமை பதவிகளுக்கு வந்து இவ்வுலகினில் பொதுநலமான உயர்சேவைகளை செய்திடுவார்கள்.

இவ்விதமான ஆட்சி நடந்திடவே எல்லாம்வல்ல முழுமுதற் கடவுள் முருகப்பெருமானே உலகினில் நேரில் தோன்றி உலகின் தருமபலத்தை பெருக்கி மக்களுக்கு நேர்மையான வாழ்வையும் வளமான வாழ்வும் தந்தருள்வார்.

ஆதலினால் கலியுகத்தினில் வாழும் மக்களே ஞானயுகம் அமைக்கின்ற கலியுக மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனை நோக்கி உடன் விரைந்து வாரீர் வாரீர். அரங்கனை நாடி வந்து பயபக்தியுடன் பணிந்து பின் தொடர்வோர் நல்ல மாற்றங்களை அடைவார்கள், பலபல சிறப்புகளை பெற்று மேன்மையுறுவர், தடையின்றி ஞானத்தில் தேற்றம் அடைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் பிடிநாகீசர்.

–சுபம்–